4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 623 /2022 நாள்: 24.01.2025 வா.சா.3– சரவணன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை

நான் மாங்காய் வியாபாரம் செய்கிறேன். அதன் மூலம் மாதம் ரூ.40,000/– முதல் ரூ.50,000/– வரை வருமானம் கிடைக்கும். நான் வருமான வரி செலுத்துகிறனோ என்றால் இல்லை. அடமான ஆவணம் தயார் செய்யும் போது என்னுடைய நிரந்தர வருமான வரி கணக்கு எண் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். செந்தில் குமார் 2021ம் ஆண்டு இறந்தார். செந்தில் குமாரின் சொத்து சம்பந்தமான மூல ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அடமான கடன் பத்திரத்தில் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். தாவா சொத்தின் சுவாதீனத்தில் நாங்கள் தான் இருக்கிறோம். எந்த ஆவணத்தின் அடிப்படையில் சுவாதீனத்தில் இருக்கிறோம் என்றால் தனியாக ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளார். 05.09.2018 தேதியில் ஆவணம் பதிவு செய்யப்பட்டது. 05.09.2018 தேதியில் இரண்டு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். இரண்டு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கணக்கு உள்ளது. 04.09.2018 தேதியன்று பணம் கொடுத்தோம். அன்று அவர் அதற்கு ஒரு ஆவணமும் எழுதி கொடுத்தார். அந்த ஆவணத்தை செந்தில்குமார் திரும்ப பெற்றுக்கொண்டார். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் பணம் ரூ.20 லட்சம் கொடுத்ததை

சொல்லியுள்ளார். ஆவணம் பதிவு செய்த போது அந்த ஆவணத்தை பெற்றுக்கொண்டார். அந்த ஆவணத்தின் நகல் எதுவும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை வழக்கிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அடமான கடன் ஆவணத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் நான் சரியாக பார்க்கவில்லை. 1ம் வாதி மூர்த்தி என்னுடைய பெரியப்பா மகன் ஆவார். 3ம் வாதி மணிகண்டன் எனக்கு தம்பி முறை ஆகும். 3ம் வாதி மணிகண்டன் ரூ.7லட்சம் கொடுத்துள்ளார். நான் ரூ. 7 லட்சம் கொடுத்தேன். மூர்த்தி ரூ.7லட்சம் கொடுத்தார். ஆக மொத்தம் ரூ.21 லட்சம் ஆகும். மேற்படி விவரங்களை வழக்கில் தெரிவித்துள்ளோம். பிரதிவாதிகள் ரூ.20 லட்சம் வாங்கியுள்ளதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. வட்டி எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்து 7 ஏக்கர் ஆகும். தாவா சொத்தில் 75 மாமரங்களும், 300 தென்னை மரங்களும் உள்ளது. மேற்படி மரங்களின் பலன்களை யாரும் அனுபவிக்கவில்லை. நாங்கள் பார்த்துவிட்டு வந்துவிடுவோம். வேறு யாரும் பூமியை பராமரிக்கவில்லை. ரூ.7 லட்சம் இருந்ததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடமான ஆவணம் தான் உள்ளது. வேறு ஆவணங்கள் இல்லை. வங்கியில் 05.09.2018 தேதியில் ரூ.7லட்சம் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி தேதியில் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்வதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். சிவக்குமார், செந்தில் குமாரின் தம்பி ஆவார். 05.09.2018–க்கு பின்னர் எனக்கும் செந்தில்குமாருக்கு பேச்சுவார்த்தை இருந்ததா என்றால் ஆமாம். வட்டி கொடுக்காததால் செந்தில்குமார் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வட்டி கேட்டதற்கு நிலத்தை எழுதி கொடுப்பதாக சொல்லியிருந்தார். அடமான பத்திரத்தில் வட்டி தொகை கொடுப்பதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றும், பூமியை வைத்து அதில் இருந்து

வருமானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். செந்தில்குமார் என்ன தேவைக்காக பணம் பெற்றார் என்று அடமான ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஏற்கனவே அந்த சொத்து தொடர்பாக கிரைய ஒப்பந்தம் போட்டிருந்ததால் அதற்கான தொகையை கொடுப்பதற்காக எங்களிடம் பணம் வாங்கினார். யாரிடம் கிரைய ஒப்பந்தம் போட்டிருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் எலையமுத்துரை சேர்ந்த குமாரசாமி மற்றும் இரண்டு நபர்களிடம் வாங்கியிருந்தார். மேற்படி விவரங்களை வழக்கில் சொல்லவில்லை. அடமான பத்திரத்திலும் சொல்லவில்லை. செந்தில்குமாரின் சகோதரர் சிவக்குமாருக்கும், எனக்கும் கருத்து வேறுபாடோ விரோதமோ கிடையாது என்றால் சரிதான். தற்போது வரை நல்ல பழக்கத்தில் தான் இருக்கிறேன். வழக்கிற்கு முன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் தெரியும். மேற்படி அறிவிப்பு யார் யாருக்கு அனுப்பப்பட்டது என்றால் பிரதிவாதிகளுக்கும், சிவக்குமாருக்கும் அனுப்பப்பட்டது. சிவக்குமாரை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள கடனுறுதி சீட்டில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். தேதி மட்டும் நினைவில்லை. நான் பணம் கொடுத்து அடமான கடன் எழுதி வாங்குவது வழக்கம் தானா என்றால் இல்லை. ஏற்கனவே ஒரு கடன் இருக்கும் போது மற்றொரு கடன் கொடுக்க மாட்டார்கள் என்றால் சரிதான். அடமான கடன் ஆவணத்தில் உள்ள சொத்து விவரங்கள் எந்த ஆவணத்தை பார்த்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தென்னை மரங்கள் மற்றும் மாமரங்கள் பலன் தரக்கூடியவை என்றால் சரியல்ல. மாமரங்களில் மட்டும் அந்தந்த சீசன்களில் மாங்காய் பறிப்பதுண்டு. அடமான கடனுக்கு பிறகு தான் பூமியை பார்த்தேனா என்றால் ஆமாம். வில்லங்க சான்றிதழ் எப்போது பார்த்தேன் என்றால் ஆவணம் எழுதிய அன்று பார்த்தேன். யார் பெயரில் வில்லங்க சான்றிதழ் விண்ணப்பிக்கப்பட்டது என்றால் செந்தில் குமார் தான் வில்லங்க சான்றிதழ்

பெற்றுக்கொடுத்தார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. நான் வில்லங்க சான்றிதழை படித்துப்பார்க்கவில்லை. வில்லங்க சான்றிதழ் குறித்த விவரத்தை என் அண்ணன் தான் சொன்னார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. செந்தில்குமார் இறந்து 2 முதல் 3 மாதங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அசல் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என எனக்கு தெரியாது. வழக்கு சொத்து செந்தில்குமாருக்கு எந்த வகையில் பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்றால் தாத்தா வகையில் செந்தில்குமாரின் தாயாருக்கு பாத்தியம் ஆகும். சிவக்குமார் கூறிதான் அடமான ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஏற்கனவே போடப்பட்ட கிரைய ஒப்பந்தப்படி சொத்துக்கள் கைவிட்டு போகும் நிலையில் இருந்ததால் செந்தில் குமாரிடம் கூறி பின்னர் பணம் கொடுத்து ஏற்படுத்தப்பட்டது. செந்தில்குமார் உடன் பிறந்தவர்கள் சிவக்குமாரை தவிர மேலும் 4 சகோதரிகள் உண்டு. செந்தில்குமாரின் தாயார் பெயரில் சொத்து இருப்பதால் அனைவருக்கும் சொத்தில் கூட்டு உரிமை உண்டு என்றால் சரியல்ல. வழக்கறிவிப்பிலும், வழக்குரையிலும் கிரைய ஒப்பந்தப்படி சொத்து கைவிட்டுபோகும் நிலையில் இருந்ததால் மேற்படி பணம் கொடுத்து அடமான பத்திரம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். செந்தில்குமார் மதுப்பழக்கத்தினால் உடல்நிலை பாதிக்கப்பட்டு அதனால் தான் இறந்தார் என்றால் சரியல்ல. செந்தில்குமாரை நேரடியாக தெரியாது என்றும், சிவக்குமார் மூலமாக தான் தெரியும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் நான்கு எல்லை விவரங்கள் தெரியாது. அதன் சர்வே எண்கள் பற்றி தெரியாது. செந்தில்குமாருக்கு எந்த தொகையும் கொடுக்காமல் சிவக்குமார் உதவியுடன் நாங்கள் மோசடியாக அடமான பத்திரம் தயார் செய்து கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. சிவக்குமார் சொத்தை அடைவதற்காக எங்கள் உதவியுடன் மோசடியாக ஆவணம் தயார் செய்து கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிடை கிரையத்தை ரத்து செய்வதற்கு நாங்கள் தான் பணம் கொடுத்தோமா என்றால் செந்தில்குமாரிடம் கொடுத்து தான்

கொடுத்தோம். அன்றைய தேதியிலேயே நாங்கள் கொடுத்த பணத்தை எதிரிடை கிரையம் போட்ட நபருக்கு கொடுத்துவிட்டார்களா என்றால் ஆமாம். மேற்படி விவரங்களை வழக்குரையிலோ, சாட்சியத்திலோ, வழக்கறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது அனைத்தும் தவறானது என்றும், செந்தில்குமாரிடம் நாங்கள் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அடமான கடன் மற்றும் கடனுறுதி சீட்டு கடன் தொடர்பான எந்த விவரங்களும் பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் அது எங்களுக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த போது பிரதிவாதிகள் S.V.புரத்தில் குடியிருந்தார்கள். வழக்கு சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் பொய்யாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் மற்றும் சிவக்குமார் ஒன்று சேர்ந்து செந்தில்குமாரின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2025.01.24 17:51:38 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.